# பருத்திக்கான விலை முன்னறிவிப்பு

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் விலை முன்னறிவிப்புத் திட்டமானது, பருத்திக்கான விலை முன்னறிவிப்பை உருவாக்கியுள்ளது.

சர்வதேச பருத்தி ஆலோசனை குழு, உலகளாவிய பருத்தி நுகர்வு 23 மில்லியன் டன்கள் எனவும், இது உற்பத்தி 24.2 மில்லியன் டன்களை விட 1.2 மில்லியன் டன்கள் குறைவாகும் என அறிவுத்துள்ளது. அமெரிக்க வேளாண் துறையின் அறிக்கையின்படி, 2020-21-ஆம் ஆண்டில் உலக பருத்தி உற்பத்தி 24.9 மில்லியன் டன்களாக இருக்குமெனவும், இதில் சீனாவும் இந்தியாவும் இணைந்து பாதிக்கு மேலாக பங்குவகிக்கின்றன.

பருத்தி இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட 11 சதவீத வரி காரணமாக, இந்தியாவில் பருத்தி இறக்குமதி 10 இலட்சம் பொதிகளாக குறைந்துள்ளது. இது முந்தைய ஆண்டை விட 9 சவீதம் குறைவாகும். இந்தியாவில் பருத்தி ஏற்றுமதி 46 இலட்சம்' பொதிகளாகவும் மற்றும் இது கடந்த ஆண்டை விட 59 சதவீதம் குறைவாகும். வங்கதேசம், சீனா, வியட்நாம், பாகிஸ்தான் மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளுக்கு இந்தியா பருத்தியை ஏற்றுமதி செய்கிறது.

இந்திய பருத்தி கழகத்தின் படி, இந்தியாவில் பருத்தி உற்பத்தி 2020-21-ஆம் ஆண்டில் 352 இலட்சம் பொதிகளிருந்து 2021-22 ஆம் ஆண்டு பருத்தி பருவத்தில் (அக்டோபர்-செப்டம்பர்)315 இலட்சம் பொதிகளாக குறைந்துள்ளது. பஞ்சாலைகளின் குன்றிய தேவை காரணமாக, பருத்தியின் விலை சமீப காலமாக சற்று குறைந்து காணப்படுகிறது.

தமிழ்நாட்டில், பருத்தி முக்கியமாக மாசிப்பட்டம், ஆடிப்பட்டம் மற்றும் கார்த்திகைப்பட்டம் ஆகிய பருவங்களில் விதைக்கப்படுகிறது. தற்போது, ஆடிப்பட்டம் முடியும் தருவாயில் மாசிபட்டம் விதைப்பு தொடங்கியுள்ளது. தமிழ்நாடு பருத்தியின் முக்கிய நுகர்வோராக திகழ்கிறது. 2021-22 ஆம் ஆண்டில் 1.48 இலட்சம் எக்டரில் பயிரிடப்பட்டு 3.6 இலட்சம் பொதிகள் உற்பத்தி செய்துள்ளது, இது கடந்த ஆண்டை விட பரப்பளவில் 7.5 சதவீதமும், உற்பத்தியில் 6 சதவீதமும் அதிகரித்துள்ளது. பருத்தி ஆலையாளர்கள் தங்களது தேவைகேற்ப குஜராத், மகாராஷ்டிரா, ஆந்திரா மற்றும் கர்நாடகாவிலிருந்து கொள்முதல் செய்கின்றனர்.

விலை முன்னறிவிப்புத் திட்டமானது, விவசாயிகள் விதைப்பு மற்றும் விற்பனை முடிவுகளை எடுக்க ஏதுவாக கடந்த 26 ஆண்டுகளாக கொங்கணாபுரம் கூட்டுறவு விற்பனை மையத்தில் நிலவிய பருத்தியின் விலை மற்றும் சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வுகளின் அடிப்படையில், பருத்தியின் சராசரி பண்ணை விலை மார்ச் முதல் ஜூன் 2023 வரை குவிண்டாலுக்கு ரூ.7000 முதல் ரூ.7500 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில், விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்**

i) உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்641003
தொலை பேசி 04222431405

ii) இயக்குனர் மற்றும் முனைஅதிகாரி
தமிழ்நாடு நீர்வளநிலவளத் திட்டம்
நீர் நுட்ப மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்003 641 -
தொலை பேசி - 0422 -6611278

**தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

பேராசிரியர் மற்றும் தலைவர்
பருத்தி துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் 641003
தொலை பேசி - 0422 -2456297

## Price Forecast for Cotton

The TN-IAM Project funded Price Forecasting Scheme of the Centre for Agricultural and Rural Development Studies, Tamil Nadu Agricultural University, Coimbatore has developed market advisory for Cotton.

The International Cotton Advisory Committee has estimated the global cotton consumption is expected to be lower than the production by more than 1.2 million tonnes, at 23 million tonnes and 24.2 million tonnes respectively. As per USDA reports, China and India together are expected to account for more than half of the global cotton crop in 2020-21, as the world cotton production is projected at 24.9 million tonnes.

India's cotton imports are estimated to be reduced to 10 lakh bales which is 9 per cent lesser than the previous year due to 11 per cent duty levied an imports. India's cotton export is estimated at 46 lakh bales which is 59 per cent lower than 2020-21 year due to low demand. India exports cotton mainly to Bangladesh, China, Vietnam, Pakistan and Indonesia.

According to the Cotton Association of India, the Cotton production in India has reduced from 352 lakh bales in 2020-21 to 315 lakh bales in Cotton Season 2021-22(October to September). Due to poor demand by cotton industries, the market price for cotton has been reduced significantly in recent times.

The major sowing season for cotton in Tamil Nadu is Maasipattam, Aadipattam and Karthikaipattam. At present, fresh arrivals of Aadiptaam nearing completion and Maasipataam sowing is started in Tamil Nadu. Tamil Nadu, being the major consumer of cotton, the area under cotton in 2021-22 is 1.48 lakh hectares which is 7.5 per cent higher than the previous year and the production is 3.6 lakh bales which is six per cent higher than the previous year. Millers procure cotton from Gujarat, Maharashtra, Andhra Pradesh and Karnataka for their industry demand.

The Price Forecasting Scheme has analysed the past 26 year historical cotton prices prevailed in Konganapuram Cooperative marketing Society and Conducted market survey to facilitate farmers to take up selling and sowing decisions. As per the result of the analysis and market survey, the farm gate price of good quality cotton during March to June would be Rs.7000-7500 per quintal. Hence, farmers are advised to take up sowing decision accordingly.

***For Marketing information details contact:***

*i).Domestic and Export Market Intelligence Cell*
*Centre for Agricultural and Rural Development Studies (CARDS)*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore - 641 003.*
*Phone: 0422-2431405*

*ii).The Director and TN-IAMP Nodal Officer*
*Water Technology Centre*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore - 641 003.*
*Phone: 0422-6611278*

***For Technical Details please contact***

*Professor and Head,*
*Department of Cotton,*
*Tamil Nadu Agricultural University,*
*Coimbatore – 641 003.*
*Phone No: 0422-2456297*